# செங்கோட்டை நகராட்சி
# 20.04.2020 அன்று நடைபெற்ற அவசரக் கூட்டத்தின் தீர்மானங்கள்

மன்றப்பொருள்..1

செங்கோட்டை நகராட்சி பகுதியில் 14 வது நிதிக்குழு திட்டத்தில் சாலைப்பணிகள் மேற்கொள்ள அரசு விதிகளின்படி செய்தி மக்கள் தொடர்பு துறை மூலம் ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் மேற்கொண்ட வகைக்கு மாலைமுரசு நாளிதழின் பட்டியல் படி ரூ.9450/- மேற்படி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மானம் எண். 226

அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்..2

செங்கோட்டை நகராட்சியின் 2019-2020ம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு.

மன்றம் பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண். 227

பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது

மன்றப்பொருள்..3

செங்கோட்டை நகராட்சியில் 2020-21 நிதியாண்டில் திட்டப்பணிகளான கசடு கழிவு சுத்திகரிப்பு திட்டத்தின் கீழ் ரூ. 260.00 லட்சம் மதிப்பீடுடில் பணிகள் நடைபெற்று வருகின்றது. இந்நிலையில் அனைத்து குடியிருப்புகளுக்கும் Internal Plumbing மூலம் 175.00 லட்சம் திட்ட மதிப்பீட்டில் பணிகள் நடைபெறுகின்றது. இந்நகராட்சியில் குழாய் பொருத்துநர் பணியிடம் பல ஆண்டுகளாக காலியாக இருந்து வருகின்றது. புதிய நியமனங்கள் மேற்கொண்டிட மொத்த வருவாய் இனத்தில் ஊதியம் மற்றும் ஒய்வூதியமானது 63.00 விழுக்காட்டிற்கு மேல் உள்ளது. எனவே, திட்டப்பணிகளை துரிதப்படுத்தவும் மேற்பார்வையிட பணி ஆய்வர் பணியிடம் இந்நகராட்சியில் இல்லை. மேலும் பொதுப்பணிமேற்பார்வையாளர் திட்டப்பணிகளை ஆய்வு செய்திடவும் குடிநீர் வழங்கிட நீர் ஆதாரமான தாமிரபரணி கூட்டு குடிநீர் திட்டம் ஊர்காடு 42 கி.மீ. ஆய்வுக்கு செல்ல வேண்டியுள்ளதால் தொய்வின்றி பணிகளை மேற்கொண்டிட குழாய் பொருத்துநர் தகுதிக்குட்பட்ட தொழிற் நுட்ப பணியாளர் பொதுப்பணித்துறை 2020-21ல் அங்கீகரித்துள்ள விலை தாரண பட்டியல் படி நாள் ஒன்றுக்கு ரூ. 660/- வீதம் (Fitter Grade II) தொழிற்நுட்ப பணியாளர் ஒப்பந்த வீதத்திற்கு ஓராண்டு மட்டும் தனியார் சந்தை மூலம் பணியமர்த்தி கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு..

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. ஆண்டொன்றுக்கு ரூ. 237600/- வருவாய் மற்றும் மூலதனநிதி மூலம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண். 228

அனுமதி வழங்கப்பட்டது.